

இளைஞர் நலன், விளையாட்டு மேம்பாடு மற்றும் சிறப்புத் திட்ட செயலாக்கத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (18.06.2024) சென்னை முகாம் அலுவலகத்தில் பாலியல் குற்றங்களால் பாதிக்கப்பட்ட குழந்தைகளுக்கு உதவிட போக்ஸோ இணைய முகப்பு (POCSO PORTAL) குழந்தைகளுக்கான தனிநபர் பராமரிப்பு செயலி (INDIVIDUAL CARE PLAN APP) தமிழ்நாடு கைம்பெண்கள் மற்றும் ஆதரவற்ற மகளிர் நல வாரியத்தில் உறுப்பினர் சேர்க்கைக்காக உருவாக்கப்பட்டுள்ள வலை பயன்பாடு (WEB APPLICATION) குழந்தை பராமரிப்பு நிறுவனங்களுக்கான ஆய்வு மற்றும் கண்காணிப்பு செயலியையும் (INSPECTION AND MONI TORING APP FOR CHILD CARE INSTITUTIONS) துவக்கி வைத்தார்கள். இந்நிகழ்வின் போது சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை அமைச்சர் திருமதி பி. கீதா ஜீவன், சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறை செயலாளர் திருமதி ஜெயஸ்ரீ முரளிதரன், சமூக நல ஆணையர், திருமதி வே. அமுதவல்லி, குழந்தைகள் நலன் மற்றும் சிறப்புச் சேவைகள் துறை இயக்குநர் அமர் குஷ்வாஹா, ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் இயக்குநர் திருமதி ஜெ.யு. சந்திரகலா, ஆகியோர் உடனிருந்தனர்.



'இந்தியா' கூட்டணியின் சார்பில் திருப்பெரும்புதூர் நாடாளுமன்றத் தொகுதியில் போட்டியிட்டு வெற்றி பெற்ற கழகப் பொருளாளர் டி.ஆர்.பாலு, எம்.பி., மக்கள் நீதி மய்யம் கட்சியின் தலைவர் கமல்ஹாசன் அவர்களை மரியாதை நிமித்தமாகச் சந்தித்தார்.



'இந்தியா' கூட்டணியின் சார்பில் திருப்பெரும்புதூர் நாடாளுமன்றத் தொகுதியில் போட்டியிட்டு வெற்றி பெற்ற கழகப் பொருளாளர் டி.ஆர்.பாலு, எம்.பி., விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் தலைவர் தொல்.திருமாவளவன் அவர்களை மரியாதை நிமித்தமாகச் சந்தித்தார்.

## அனைத்துச் சட்டங்களும் ஆங்கிலத்தில் இருப்பது கட்டாயமாகும்!

## இந்திய அரசியலமைப்பின் 348-வது பிரிவை நீக்கும் வகையில்

# ஒன்றிய அரசு உருவாக்கிய மூன்று புதிய சட்டங்களை நிறுத்தி வைத்திடுவீர்!

## ஒன்றிய உள்துறை அமைச்சருக்கு - முதல்வர் மு.க.ஸ்டாலின் கடிதம்!

**சென்னை,ஜூன்.20-**

**இந்திய அரசியலமைப்பின் 348 வது பிரிவை மீறும் வகையில் இந்தியத் தண்டனை சட்டங்களுக்குப் பதிலாக ஒன்றிய அரசு உருவாக்கியுள்ள மூன்று புதிய சட்டங்களை மறுபரிசீலனை செய்திடவும் அவற்றை நிறுத்திவைத்திடவும் ஒன்றிய உள்துறை அமைச்சருக்கு முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் கடிதம் எழுதியுள்ளார்.**

**அக்கடிதம் வருமாறு:**

தற்போதுள்ள இந்திய தண்டனைச் சட்டம், 1860, குற்றவியல் நடைமுறைச் சட்டம், 1973 ஆகியவற்றை ரத்து செய்து ஒன்றிய அரசு இயற்றிய மூன்று புதிய குற்றவியல் சட்டங்களை அமல்படுத்துவதில் மாநிலம் எதிர்கொள்ளும் சில ஆட்சேபணைகள் மற்றும் சிக்கல்களை உங்கள் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன். மற்றும் இந்திய ஆதாரச் சட்டம், 1872, 01.07.2024 முதல் நடைமுறைக்கு வர வாய்ப்புள்ளது.

மேற்கூறிய மூன்று சட்டங்களின் மாற்றீடு போதிய ஆலோசனைகள் மற்றும் ஆலோசனைகள் இன்றி அவசரமாகச் செய்யப்பட்டுள்ளது. இந்தச் சட்டங்கள் இந்திய அரசியலமைப்பின் கூட்டுப் பட்டியல் IIIக்குள் அடங்கும், எனவே மாநில அரசுடன் விரிவான ஆலோசனை நடத்தப்பட்டிருக்க வேண்டும். மாநிலங்களுக்கு தங்கள் கருத்துக்களைத் தெரிவிக்க போதிய அவகாசம் வழங்கப்படாததால், எதிர்க்கட்சிகள் பங்கேற்காமல் புதிய சட்டங்கள் நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டன.

பாரதிய நியாயா சன்ஹிதா (BNS), 2023; பாரதிய நாக்ரிக் சுரக்ஷா சன்ஹிதா (பிஎன் எஸ்எஸ்), 2023; பாரதிய சாக்ஷ்யா ஆதினியம் (பிஎஸ்ஏ), 2023 ஆகிய மூன்று சட்டங்களும் சமஸ்கிருதத்தில் பெயரிடப்பட்டுள்ளன, இது இந்திய அரசியலமைப்பின் 348 வது பிரிவை தெளிவாக மீறுகிறது. நாடாளுமன்றத்தால் நிறைவேற்றப்படும் அனைத்துச் சட்டங்களும் ஆங்கிலத்தில் இருப்பது கட்டாயமாகும்.

கூடுதலாக, இந்தச் சட்டங்களில் சில அடிப்படைப் பிழைகள் உள்ளன. உதாரணமாக, பாரதியவின் பிரிவு 103 நியாயா சன்ஹிதா (BNS)க்கு இரண்டு வெவ்வேறு வகை கொலைகளுக்கு இரண்டு உட்பிரிவுகள் உள்ளன. ஆனால் இவை இரண்டும் ஒரே தண்டனையைக் கொண்டுள்ளது. BNSல் இன்னும் சில விதிகள் உள்ளன, அவை தெளிவற்ற அல்லது சுயமுரண்பாடானவை.

மேலும், இந்தப் புதிய சட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்கு கல்வி நிறுவனங்களுடன் கலந்துரையாடல் மற்றும் Law College மாணவர்களுக்கான பாடத்திட்டத்தைத் திருத்து வதற்கு போதுமான நேரம் தேவைப்படும். பங்குதாரர் துறைகளுக்கான திறன் மேம்பாடு மற்றும் பிற தொழில்நுட்பத் தேவைகள் அதாவது, நீதித்துறை, காவல் துறை, சிறைச்சாலைகள், வழக்கு விசாரணை மற்றும் தடயவியல் ஆகியவற்றிற்கு போதுமான ஆதாரங்களும் நேரமும் தேவை. அவசரமாகச் செய்ய முடியாத தொடர்புடைய துறைகளுடன் கலந்தாலோசித்து, புதிய விதிகளை உருவாக்குவதும், தற்போதுள்ள படிவங்கள் மற்றும் செயல்பாட்டு நடைமுறைகளைத் திருத்துவதும் கட்டாயமாகும்.

மேற்கூறியவற்றின் அடிப்படையில், அனைத்து மாநிலங்கள் மற்றும் பிற முக்கிய அமைப்புகளின் கருத்துக்களைக் கவனத்தில் கொண்டு புதிய சட்டங்களை மறுபரிசீலனை செய்து, ஏற்கனவே அறிவிக்கப்பட்ட மேற்கூறிய சட்டங்களை நிறுத்தி வைக்குமாறு மத்திய அரசைக் கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு முதல்வர் அவர்கள் அக்கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

### 'போக்ஸோ' இணைய முகப்பு - தனிநபர் பராமரிப்புத் திட்ட செயலி - கைம்பெண்

# ஆதரவற்ற மகளிர் நலவாரிய உறுப்பினர் சேர்க்கை 'கைபேசி செயலி'!

## அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் துவக்கி வைத்தார்!

**சென்னை, ஜூன் 20-**

**இளைஞர் நலன், விளையாட்டு மேம்பாடு மற்றும் சிறப்புத் திட்ட செயலாக்கத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் பாலியல் குற்றங்களால் பாதிக்கப்பட்ட குழந்தை களுக்கு உதவிட போக்ஸோ இணைய முகப்பு, தனிநபர் பராமரிப்பு திட்ட செயலி (Individual Care Plan Application), குழந்தை பராமரிப்பு இல்லங்களை ஆய்வு செய்வதற்கான செயலி(Inspection and Monitoring Application), கைம்பெண்கள் மற்றும் ஆதரவற்ற மகளிர் நல வாரியத்தின் உறுப்பினர் சேர்க்கைக்கான கைபேசி செயலி ஆகியவற்றை, துவக்கி வைத்தார்.**

**இது தொடர்பான, அரசின் செய்திக் குறிப்பு வருமாறு :-**

குழந்தைகள் நலனில் எப்போதுமே, அக்கறை கொண்ட தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், குறிப்பாக பெண் குழந்தைகள் மாநிலத்தில் பாதுகாப்பாக வளர்ந்து, ஆற்றல் பெற்று தன்னிறைவு அடைய, பல்வேறு முன்னோடி திட்டங்களை செயல்படுத்தி வருகிறார்கள். அவ்வகையில், பாலியல் குற்றங்களிலிருந்து குழந்தைகள் பாதுகாக்கவும், பாதிக்கப்பட்ட குழந்தைகளுக்கு தேவையான அனைத்து உதவிகளையும் உடனடியாக வழங்கிடவும் முதலமைச்சர் அவர்கள் உத்தரவிட்டுள்ளார்கள்.

இதன் தொடர்ச்சியாக இளைஞர் நலன், விளையாட்டு மேம்பாடு மற்றும் சிறப்புத் திட்ட செயலாக்கத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் போக்சோ சட்டத்தினை அமல்படுத்துதல் தொடர்பாக நடந்த ஆய்வுக் கூட்டத்தில் போக்சோவுக்கென தனி இணைய தளம் உருவாக்கப்படவேண்டும் என அறிவுறுத்தினார்கள்.

இளைஞர் நலன், விளையாட்டு மேம்பாடு மற்றும் சிறப்புத் திட்ட செயலாக்கத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (18.06.2024) சென்னை முகாம் அலுவலகத்தில், போக்சோ இணையதளம் https://www.pocsoportal.tn.gov.in தனி நபர் பராமரிப்பு திட்ட செயலியையும் (Individual Care Plan Application) குழந்தை பராமரிப்பு இல்லங்களை ஆய்வு செய்வதற்கான செயலியையும் (Inspection and Monitoring Application), கைம்பெண்கள் மற்றும் ஆதரவற்ற மகளிர் நல வாரியத்தின் உறுப்பினர் சேர்க்கைக்கான கைபேசி செயலியையும் துவக்கி வைத்தார்கள்.

போக்சோ இணைய முகப்பு (POCSO PORTAL) :-

போக்சோ இணையதள முகப்பு (POCSO PORTAL) மூலம், பாலியல் குற்றங்களில் பாதிக்கப்பட்ட குழந்தைகள் தொடர்பான வழக்குகளை காவல் துறை, போக்சோ நீதிமன்றம் / மகளிர் நீதிமன்றம் மற்றும் குழந்தைகள் நலன் மற்றும் சிறப்புச் சேவைகள் துறை ஆகிய துறைகள், விவரங்களை உடனுக்குடன் பதிவு செய்யவும், பாலியல் குற்றங்களில் பாதிக்கப்பட்ட குழந்தைகளின் வழக்குகள் காவல் துறையால் பதிவு செய்யப்படுவது முதல், நீதிமன்ற இறுதி தீர்ப்பு வரையும், ஒவ்வொரு நடவடிக்கையையும் அத்துறை சார்ந்த உயர் அலுவலர்கள் கண்காணித்து வழக்கினை விரைவுபடுத்த இயலும்.

மேலும், பாதிக்கப்பட்ட குழந்தைகளுக்கான இழப்பீட்டு தொகையினை தாமதமின்றி, எவரையும் அணுகாமல், இணையதளம் மூலமாக நேரடியாக அவர்களின் வங்கி கணக்கிற்கு செலுத்தவும், துறை சார்ந்த உயர் அலுவலர்களால் வழக்கு துரிதமாக தீர்வு செய்வதை கண்காணிப்பதற்கும் இவ்விணைய தளம் பயனுள்ளதாக அமையும். குழந்தை தொடர்பான விவரங்கள் எவருக்கும் தெரியாத வண்ணம் இவ்விணைய தளம் வடிவமைக்கப்பட்டுள்ளது.

தனி நபர் பராமரிப்பு திட்ட செயலி :- (Individual Care Plan Application)

தற்போதுள்ள நடைமுறையின்படி தமிழ்நாட்டில் உள்ள குழந்தைகள் இல்லங்களில் உள்ள குழந்தைகளுக்கான தனி நபர் பராமரிப்பு திட்டம் (Individual Care Plan) மூலம், ஒவ்வொரு குழந்தையும் குழந்தைகள் இல்லங்களில் சேர்ப்பதிலிருந்து, அவர்களின் ஆரோக்கியம், மனநலன், கல்வி முன்னேற்றம் போன்ற குழந்தைகள் தொடர்பான அனைத்து முக்கிய விவரங்கள் தனி நபர் கோப்புகளில் பராமரிக்கப்படுகின்றன. இதனைத் தவிர்த்து, நிகழ் நேர கண்காணிப்பு (Real time monitoring) செய்வதற்கு ஏதுவாக தொழிற்நுட்பங்கள் பயன்படுத்தப்பட்டு, அனைத்து குழந்தைகளின் பல்வேறு குறியீடுகளை தொடர்ந்து கண்காணிக்க (continuous monitoring) இச்செயலி பயனுள்ளதாக அமையும்.

ஆய்வு மற்றும் கண்காணிப்பு செயலி (Inspection and Monitoring application) :-

குழந்தைகள் நலனை உறுதிபடுத்த தமிழ்நாட்டில் உள்ள அனைத்து இல்லங்களையும் ஆய்வு செய்வது அத்தியாவசியமாகும். அது சரியாக நடைமுறைப்படுத்தப்படுகிறதா என்பதை உறுதிபடுத்த ஆய்வு செய்யும் அலுவலர்களின் ஆய்வு நேரம், இடம், நிறுவன விவரங்கள் உள்ளிட்ட அனைத்து தரவுகளும் உடனுக்குடன் பெறுமாறு ஆய்வு மற்றும் கண்காணிப்பு செயலி (Inspection and Monitoring application) வடிவமைக்கப்பட்டுள்ளது. இச்செயலி புவியியல் குறியிடல் (Geographical tagging) வசதியுடன் வடிவமைக்கப்பட்டுள்ளது.

கைம்பெண்கள் மற்றும் ஆதரவற்ற மகளிர் நல வாரியத்தின் உறுப்பினர் சேர்க்கைக்கான கைபேசி செயலி :-

தமிழ்நாட்டின் கிராமங்கள் மற்றும் நகர்ப்புரங்களில் வாழும் ஏழை, எளிய கைம்பெண்கள், ஆதரவற்ற பெண்கள் மற்றும் பேரிளம்பெண்கள் தங்களுக்கு தேவையான உதவிகளை அரசிடமிருந்து எளியமுறையில் பெற, அவர்களுக்கு அருகில் உள்ள இ-சேவை மையங்களில், www.tnwidowwelfareboard.tn.gov.in என்ற இணையதளத்தில் தங்களின் விவரங்களை பதிவு செய்து, கைம்பெண்கள் மற்றும் ஆதரவற்ற மகளிர் நல வாரியத்தில் உறுப்பினராகலாம். இந்த வலை பயன்பாட்டின் (Web Application) வாயிலாக அவர்களுக்குத் தேவைப்பபடும் உதவிகளான சமூக நலத் துறையின் திட்டங்கள், ஓய்வூதியம், தற்காலிக தங்கும் இடம், திறன் வளர்ப்பு பயிற்சி மற்றும் சுய தொழில் செய்ய மானியம் போன்ற உதவிகளை தேவைகளை விரைந்து பெற்றிட, இவ்வாரியத்தின் மூலம் தமிழ்நாடு அரசு நடவடிக்கை மேற்கொள்ளும்.

இந்நிகழ்ச்சியில் சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறை அமைச்சர், திருமதி.கீதா ஜீவன், செயலர் திருமதி ஜெயஸ்ரீ முரளிதரன், சமூக நலத் துறை ஆணையர், திருமதி வே. அமுதவல்லி மற்றும் குழந்தைகள் நலன் மற்றும் சிறப்புச் சேவைகள் துறை, இயக்குநர் அமர் குஷ்வாஹா மற்றும் ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் துறை இயக்குநர் திருமதி ஜெ.யு. சந்திரகலா உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

இவ்வாறு அரசின் செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.



பொதுப்பணித் துறை அமைச்சர் எ.வ.வேலு மற்றும் இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு ஆகியோர் தலைமையில் நேற்று முன்தினம் (18.06.2024) தலைமைச் செயலகத்தில் திருவண்ணாமலை அருணாச்சலேசுவரர் திருக்கோயிலுக்கு வருகைதரும் பக்தர்களுக்கான வசதிகளை மேம்படுத்தி வழங்குவது தொடர்பாக ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் டாக்டர் க.மணிவாசன், இந்து சமய அறநிலையத்துறை சிறப்பு பணி அலுவலர் ஜெ.குமரகுருபரன், ஆணையர் க.வீ.முரளீதரன், தலைமைப் பொறியாளர் பி.பெரியசாமி, இணை ஆணையர் (திருப்பணி) பொ.ஜெயராமன். திருக்கோயில் இணை ஆணையர் / செயல் அலுவலர் திருமதி சி.ஜோதி மற்றும் அலுவலர்கள் கலந்துகொண்டனர்.

### மே, ஜூன் மாதங்களுக்கான

# துவரம் பருப்பு - பாமாயில் அனைத்து குடும்ப அட்டைதாரர்களுக்கும் தடையின்றி கிடைக்கும்!

## அமைச்சர் அர.சக்கரபாணி அறிவிப்பு!

**சென்னை, ஜூன் 20-**

**தமிழ்நாடு அரசால் சிறப்புப் பொது விநியோகத் திட்டத்தின் மூலம் ரூ. 14,697 கோடி மதிப்பிலான 7 இலட்சம் மெ.டன் துவரம் பருப்பு மற்றும் 64.62 கோடி பாமாயில் பாக்கெட்டுகள் கடந்த மூன்று ஆண்டுகளில் 2.23 கோடி குடும்ப அட்டை தாரர்களுக்கு விநியோகிக்கப்பட்டு ள்ளது. மே மற்றும் ஜூன் 2024 மாதங்களுக்கான துவரம் பருப்பு மற்றும் பாமாயில் அனைத்துக் குடும்ப அட்டைதாரர்களுக்கும் வழங்கப்படும் என உணவு மற்றும் உணவுப்பொருள் வழங்கல் துறை அமைச்சர் அர. சக்கரபாணி தெரிவித்துள்ளார்.**

இது குறித்து அமைச்சர் அர.சக்கரபாணி வெளியிட்டுள்ள அறிக்கை வருமாறு:-

தமிழ்நாட்டில் விலைவாசியினைக் கட்டுப்படுத்தி, ஏழை எளிய மக்களின் வாழ்வாதாரத்தினைப் பாதுகாக்கவும், ஊட்டச்சத்துடன் கூடிய உணவினை உறுதிப்படுத்திடும் நோக்கிலும் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களால் 2007-ஆம் ஆண்டு முதல் குடும்ப அட்டைதாரர்களுக்கு மாதந்தோறும் துவரம் பருப்பு மற்றும் பாமாயில் எண்ணெய் வழங்கும் திட்டம் நாட்டிலேயே முதன்முதலாக தமிழ்நாட்டில் தொடங்கப்பட்டுச் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் மூலம் சிறப்புப் பொது விநியோகத் திட்டப் பொருட்களான துவரம் பருப்பு மற்றும் பாமாயில்



எண்ணெய் கடந்த 14.04.2007 முதல் ஒவ்வொரு மாதமும் திறந்த வெளி ஒப்பந்தப்புள்ளி மூலம் கொள்முதல் செய்யப்பட்டு நியாயவிலைக் கடைகள் மூலம் குடும்ப அட்டைதாரர்களுக்கு வழங்கப்பட்டு வருகின்றன.

முதலமைச்சர் அவர்கள் ஆட்சிப் பொறுப்பேற்ற நாள் முதல் இந்நாள் வரை ரூ.7381.91 கோடி மதிப்பிலான 7,00,396 மெ.டன் பருப்பு மற்றும் ரூ.7315.96 கோடி மதிப்பிலான 64,62,50,000 பாமாயில் பாக்கெட்டுகள் கொள்முதல் செய்யப்பட்டு, சிறப்புப் பொது விநியோகத் திட்டத்தின் கீழ் தகுதி வாய்ந்த குடும்ப அட்டைதாரர்களுக்குத் தொடர்ந்து விநியோகிக்கப்பட்டு வருகின்றன.

நடைபெற்ற பாராளுமன்றத் தேர்தல் நடைமுறையின் காரணமாக மே 2024 ஆம் மாதத்திற்கான துவரம் பருப்பு மற்றும் பாமாயில் பாக்கெட்டுகள் கொள்முதல் செய்வதற்காக 05.04.2024 அன்று இந்தியத் தேர்தல் ஆணையத்திடம் அனுமதி கோரியதில், 17.04.2024 அன்று அனுமதி பெறப்பட்டு அன்றைய தினமே மே 2024 ஆம் மாதத்திற்கான ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டு நாளிதழ்களில் அறிவிக்கை வெளியிடப்பட்டது.

மே 2024 ஆம் மாதத்திற்கான ஒப்பந்தப்புள்ளிகள் இறுதி செய்யப்பட்டு 12.05.2024 அன்று பாமாயில் எண்ணெய் மற்றும் 13.05.2024 அன்று துவரம் பருப்பு அதாவது ஆணையத்தின் அனுமதி பெறப்பட்டபின் 24 நாட்களிலேயே கொள்முதல் இறுதி செய்யப்பட்டது.

அதன்படி மே 2024ஆம் மாதத்திற்கான பாமாயில் எண்ணெய் பாக்கெட்டுகள் 100 விழுக்காடு அனைத்து கிடங்குகளுக்கும் அனுப்பி அங்காடிகளுக்கு நகர்வு செய்யப்பட்டு விநியோகிக்கப்பட்டு வருகிறது.

ஜூன் மாதத் தேவையில் 78,44,160 பாக்கெட்டுகள் விநியோகிக்கப்பட்டுள்ளன. எஞ்சியுள்ள பாக்கெட்டுகள் வழங்கும் பணி விரைவு படுத்தப்பட்டு வழங்கப்பட்டு வருகின்றன. துவரம் பருப்பினைப் பொறுத்தவரையில் மே 2024 ஆம் மாத ஒதுக்கீடான 1,89,89,000 கிலோவில் இன்றுவரை 1,37,79,000 கிலோ வழங்கப்பட்டு மீதமும் விரைவாக வழங்கப்பட்டு வருகின்றன. ஜூன் மாதத் தேவையில் 40,16,000 கிலோ இதுவரை வழங்கப்பட்டு மீதியை வழங்கும் பணி விரைவு படுத்தப்பட்டு வருகிறது. ஜூன் 2024 ஆம் மாதத்திற்கான ஒப்பந்தப்புள்ளிகள் கோருவதற்காக தேர்தல் ஆணையத்திடம் அனுமதி வேண்டி 07.05.2024 அன்று அனுப்பப்பட்டு 27.05.2024 அன்று அனுமதி பெறப்பட்டு 28.05.2024 அன்றைய நாளிதழ்களில் அறிவிக்கை செய்யப்பட்டு 08.06.2024 அன்று ஒப்பந்தப் புள்ளிகள் திறக்கப்பட்டன.

அதன்பின் 11.06.2024 அன்று தேர்ந்தெடுக்கப்பட்ட ஒப்பந்ததாரர்களுடன் நேரடி பேச்சுவார்த்தை நடத்தி 13.06.2024 அன்று 13,000 மெ. டன் பருப்பு மற்றும் 1,10,00,000 பாமாயில் பாக்கெட்டுகள் கொள்முதல் செய்ய ஆணைகள் வழங்கப்பட்டு கிடங்குகளுக்கு அனுப்பி அங்காடிகளுக்கு நகர்வு செய்யப்பட்டு, குடும்ப அட்டைதாரர்களுக்கு விநியோகிக்கப்பட்டு வருகின்றன. ஆதலால் துவரம் பருப்பு மற்றும் பாமாயில் எண்ணெய் அனைத்துக் குடும்ப அட்டைதாரர்களுக்கும் வழங்கிட உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. மே 2024 ஆம் மாதத்திற்குரிய பருப்பு மற்றும் பாமாயில் பெற்றுக் கொள்ளாத குடும்ப அட்டைதாரர்கள் ஜூன் மாத முதல் வாரத்தில் பெற்றுக் கொள்ளலாம் என்று அறிவித்திருந்தாலும், ஜூன் மாதம் முழுவதும் பெற்றுக் கொள்ள உரிய வழிவகை செய்யப்பட்டுள்ளது.

முதலமைச்சர் அவர்கள் ஆட்சி பொறுப்பேற்றதிலிருந்து பொது விநியோகம் மற்றும் சிறப்புப் பொது விநியோகத் திட்டத்திற்கு உறுதுணையாக விவசாயிகளின் நலன் காக்க நெல்லுக்கான ஊக்கத் தொகை உயர்த்தி வழங்கியது, நெல் மணிகளை வீணாக்காமல் சேமிக்க மேற்கூரை அமைப்புடன் கூடிய நெல் சேமிப்புத் தளங்கள் அமைத்தது, தரமான அரிசியினைத் தொடர்ந்து விநியோகித்திட அரவை ஆலைகளில் கலர் சார்ட்டர் பொருத்தியது, வட்ட அளவில் அதிக எண்ணிக்கையில் செயல்முறைக் கிடங்குகள் கட்டிட நடவடிக்கை எடுத்தது போன்ற செயல்களால் அனைவரது பாராட்டையும் பெற்று பொது விநியோகத் திட்டம் இந்திய அளவில் தமிழ்நாடு சிறப்பாகச் செயல்பட்டு முன்னணி வகிக்கிறது.

2023-2024 ஆம் நிதியாண்டில் ரூ.10,500 கோடி நிதியை மானியமாக வழங்கி, இத்திட்டத்தினை மேலும் முனைப்புடன் செயல்படுத்திட தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் உத்தரவிட்டுள்ளார்கள்.

கடந்த அ.தி.மு.க. ஆட்சியிலும் 2017-ஆம் ஆண்டு ஜனவரி மற்றும் பிப்ரவரி மாதங்களில் பருப்பு மற்றும் பாமாயில் முற்றிலுமாக விநியோகிக்கப்படாமலிருந்த நிலை இருந்துள்ளது. தேர்தல் நன்னடத்தை விதிகளினால் ஏற்பட்ட நடைமுறைச் சிக்கல்களைத் திரித்து எதிர்க்கட்சித் தலைவர் மற்றும் சிலர் தெரிவித்த குற்றச்சாட்டுகள் முறையானதல்ல என்பதோடு மே மற்றும் ஜூன் 2024 மாதங்களின் பருப்பு மற்றும் பாமாயில் ஒதுக்கீடு முழுமையாக நகர்வு செய்யப்பட்டு அனைத்துக் குடும்ப அட்டைதாரர்களும் பெற்றுக் கொள்ள உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது என்றும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு அமைச்சர் அர.சக்கரபாணி தெரிவித்துள்ளார்.

### தமிழகத்தில் முக்கிய தலைவர்கள் பிறந்தநாளில்

# பள்ளி மாணவர்களுக்கு இனிப்புப் பொங்கல்!

## தமிழ்நாடு அரசு அறிவிப்பு!

சென்னை, ஜூன் 20-

பள்ளிகளில் முக்கிய தலைவர்களின் பிறந்த நாளில் இனி மதிய உணவுடன் சேர்த்து கூடுதலாக இனிப்பு பொங்கலும் வழங்கப்படும் என சமூக நலத்துறை அறிவித்துள்ளது.

தமிழகத்தில் அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் 1 முதல் 10ம் வகுப்பு வரை பயிலும் மாணவர்களுக்கு சத்துணவுத் திட்டத்தில் மதிய உணவு வழங்கப்பட்டு வருகிறது. அதனுடன் 1 முதல் 5ம் வகுப்பு வரையிலான குழந்தைகளுக்கு காலை உணவுத் திட்டமும் தற்போது அமலில் உள்ளது. இந்நிலையில் முக்கிய பிரமுகர்கள் பிறந்தநாளில் மதிய உணவுடன் கூடுதலாக இனிப்புப் பொங்கல் வழங்கவும் முடிவு செய்யப்பட்டுள்ளது.

இது குறித்து சமூக நலத்துறை செயலர் ஜெயஸ்ரீ முரளிதரன் வெளியிட்ட அரசாணை விவரம்: பள்ளி மாணவர்களுக்கு முக்கிய தலைவர்கள், பிரமுகர்களின் பிறந்த நாளில் இனிப்புப் பொங்கல் மட்டும் தற்போது வழங்கப்படுகிறது. வழக்கமான மதிய உணவு வழங்கப்படுவதில்லை. இதை மாற்றி இனிமேல் மதிய உணவுடன் சேர்த்து, சர்க்கரைப் பொங்கலும் அளிக்கலாம் என்று சமூக நலத் துறை ஆணையர் தெரிவித்துள்ளார்.

இதையடுத்து சத்துணவுத் திட்டத்தின் கீழ் பயனடைந்து வரும் மாணவர்களுக்கு முக்கிய தலைவர்களின் பிறந்த நாளில் மதிய உணவுடன் சேர்த்து இனிப்புப் பொங்கல் வழங்க அனுமதி வழங்கப்படுகிறது. இதற்காக ஒரு மாணவருக்கு ரூ.2 ஒதுக்கப்படுகிறது. இதன் மூலம் 42.71 லட்சம் மாணவர்கள் பயன்பெறுவார்கள். இதற்கான செலவீனத்துக்காக ரூ.4.27 கோடி நிதி ஒதுக்கப்படுகிறது.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.